இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1988 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம்

*[1988, நவம்பர் மாதம் 30 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1988, டிசெம்பர் 2 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 1.15

# 1988 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம்

[1988, நவம்பர் 30 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]
ச. வ.—ஓ. 49/83

1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலா மென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அந்த உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆஆ) ஒலிவாங்கு கருவிகளை இறக்குமதி செய்கின்ற, விற்பனை செய்கின்ற, உற்பத்தி செய்கின்ற அல்லது பொருத்தியிணைக்கின்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆட்களைப் பதிவு செய்தல் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ள), (க) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(ள) வானொலி ஒலிபரப்பும் திறனை அபிவிருத்தி செய்து முன்னேற்றும் நோக்கத்துக்காக சமூகத்துக்கு நலனளிக்கும் எனக் கூட்டுத்தாபனம் கருதுகின்றவாறான அத்தகைய எல்லாக் கருமங்களையும் செய்தல் ;

(க) மேற்கூறப்பட்ட எவையேனும் நோக்கங்களுக்காக, இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வேறெங்காயினுஞ்சரி, எவரேனும் ஆளுடன் அல்லது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது அல்லாதுவிடினுஞ்சரி ஏதேனும் ஆட்கள் குழுவுடன் சேர்ந்தோ அல்லது இணைந்தோ செயலாற்றுதல்.".

(2) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

" (ங) ஒலிவாங்கு கருவிகளை உடைமையில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் IIIஅ என்னும் பாகத்தின்கீழ் உரிமங்களை வழங்கிப் புதுப்பிக்கலாம் ; அத்துடன் அத்தகைய உரிமங்களை வழங்குவதற்கும் புதுப்பிப்பதற்கும் முகவர்களை நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய உரிமங்கள் பெறப்பட்டுள்ளன அல்லது புதுப்பிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தலாம் ; அத்துடன்

(ச) ஒலிவாங்கு கருவிகளின் இறக்குமதிகள், விற்பனைகள், உற்பத்தி அல்லது பொருத்தியிணைத்தல் என்பன தொடர்பிலான தகவலையும் விபரத் திரட்டுகளையும் ஒலிவாங்கு கருவிகளின் அத்தகைய இறக்குமதி, விற்பனை, உற்பத்தி அல்லது பொருத்தியிணைத்தல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள எல்லா ஆட்களிடமிருந்தும் கோரலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 4 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அந்தச் சட்டவாக்கத்தின் 4அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*"முகவர்களை நியமித்தல்.*

" 4அ. கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தின் IIIஅ என்னும் பாகத்தின்கீழ் உரிமங்களை வழங்குதல், புதுப்பித்தல் என்னும் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தின் முகவரொருவராக இருப்பதற்கென எவரேனும் ஆளை அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவைக் காலத்திற்குக் காலம் நியமிக்கலாமென்பதுடன், கூட்டுத்தாபனத்திற்கும் அத்தகைய முகவருக்குமிடையே உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தை அத்தகைய முகவருக்குக் கொடுக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்தப் பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

" (இஇ) 42அ என்னும் பிரிவின் கீழ் நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;" ;

(2) அந்தப் பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

" (ஈ) வானொலி உரிமங்கள் வழங்குவதற்கும் அவற்றைப் புதுப்பிப்பதற்கும் கட்டணங்களாக ஒவ்வோராண்டும் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும் ;";

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

"(ஈஈ) இச்சட்டத்தின் IIIஅ என்னும் பாகத்தின் கீழான பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்கான கட்டணங்களாக ஒவ்வோராண்டும் பெற்றுக்கொள்ளப்படும் எல்லாப் பணத் தொகைகளும் ; அத்துடன் ".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் III ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அந்தச் சட்டவாக்கத்தின் IIIஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய IIIஅ என்னும் பாகத்தை உட்புகுத்துதல்.

"பாகம் IIIஅ

உரிமங்களை வழங்குதலும் பதிவு செய்தலும்

ஒலிவாங்கு கருவிகளை உடைமையில் வைத்திருப்பதன் மீதும் அவற்றின் பயன்பாட்டின் மீதுமான தடை.

32அ (1) இயைபான தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆளெவரும், கூட்டுத்தாபனத்தால் அதற்கென வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர, ஒலிவாங்கு கருவி எதனையும் உடைமையில் வைத்திருத்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதலாகாது :—

(அ) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் குறித்துரைக்கக் கூடியதான பாடசாலையொன்றில், உயர் கல்வி நிறுவனமொன்றில், அல்லது வேறு நிறுவனத்தில் சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் சமூக அல்லது கல்விச் செயற்பாடுகள் கொண்டு நடாத்தப்படுகின்றனவென்ற நிகழ்வைக் கருத்திற்கொண்டு, இப்பிரிவின் நோக்கங்களுக்காக அத்தகைய நிறுவனத்தில் எவரேனும் ஆளினால் ஒலிவாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும் ;

(ஆ) இச்சட்டத்தின் 32ஈ என்னும் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டும் அத்துடன் அப்பிரிவின்கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவராயும் உள்ளவரான ஒலிவாங்கு கருவிகளின் எவரேனும் இறக்குமதியாளர், விற்பனையாளர், உற்பத்தியாளர் அல்லது பொருத்தியிணைப்பவர் ஒருவர், அத்தகைய இறக்குமதியாளராக, விற்பனையாளராக, உற்பத்தியாளராக அல்லது பொருத்தியிணைப்பவராக அவரது தொழிலைக் கொண்டு நடாத்துகையில் அவரால் ஒலிவாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும் ;

(இ) ஒலிவாங்கு கருவிகளைப் பழுதுபார்ப்பவரொருவர், அத்தகைய பழுதுபார்ப்பவராகத் தமது தொழிலைக் கொண்டு நடாத்துகையில், அவரால் ஒலிவாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும் ;

(ஈ) ஆளெவரினாலும் ஒலிவாங்கு கருவியொன்று தொடர்பில் இப்பாகத்தின் கீழ் வழங்கப்படும் உரிமமொன்றை வைத்திருப்பவரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான அனுமதியுடன் அல்லது அவரது அறிவுறுத்தலின் பேரில் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட வளவுகளில் அக்கருவி பயன்படுத்தப்படுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் அல்லது 44 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின்கீழ் தாபித்துப் பேணப்படும் ஏதேனும் தனியார் ஒலிபரப்பு நிலையத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தில் அல்லது அந்நிலையத்தில் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள ஆளெவரினாலும் ஒலிவாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும் ;

(3) (அ) எந்த வகுதியினவான வளவுகளிலும் பல ஒலிவாங்கு கருவிகள் பயன்படுத்தப்படக் கூடிய சாத்தியம் உண்டென அமைச்சர் கருதுகின்றவிடத்து, அவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இப்பிரிவின் ஏற்பாடுகள் அந்த வகுதியினவான வளவுகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம்.

(ஆ) எந்த வகுதியினவான வளவுகளுக்கு இப்பிரிவு ஏற்புடையதாகின்றதோ அந்த வகுதியொன்றில் உள்ளடக்கப்படும் எவையேனும் வளவுகளின் சொந்தக்காரர், அத்தகைய வளவுகளில் நிறுவப்படும் ஒலிவாங்கு கருவியொவ்வொன்று தொடர்பிலும் ஓர் உரிமத்திற்கு விண்ணப்பிப்பதற்குப் பதிலாக அவ் வளவுகள் தொடர்பில் ஓர் உரிமத்திற்கு விண்ணப்பிக்கலாம். இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படல் வேண்டும். வெவ்வேறு வகுதியினவான வளவுகள் தொடர்பில்,

அந்த வகுதியினவான வளவுகளில் பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியம்கொண்ட ஒலிவாங்கு கருவிகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, வெவ்வேறு கட்டணங்கள் விதித்துரைக்கப்படலாம்.

(இ) பிரிவுகள் 32இ, 32ஈ, 32உ, 32 ஊ என்பவற்றின் ஏற்பாடுகள், (2) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமங்களுக்கான விண்ணப்பத்திற்கும் அவற்றை வழங்குதலுக்கும், புதுப்பித்தலுக்கும், அவை தொடர்பாகவும், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஈ) எவையேனும் வளவுகள் தொடர்பில், இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமமொன்று வலுவிலிருக்கின்றவிடத்து, அத்தகைய வளவுகளில் எவரேனும் ஆளினால் ஒலிவாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும், பயன்படுத்தப்படுதலும் 32இ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழானது எனக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின், நோக்கங்களுக்காக, "உயர் கல்வி நிறுவனம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

32ஆ. பிரிவு 32அ என்பதிலுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இயைபான தேதிக்கு நேர் முன்னர் ஒலிவாங்கு கருவியொன்றைத் தனது உடைமையில் வைத்திருந்தவரான எவரேனும் ஆள், இயைபான தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்றுமாத காலப்பகுதியொன்றிற்கு அதற்கான உரிமமொன்றின்றி அத்தகைய ஒலிவாங்கு கருவியை உடைமையில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். இயைபான தேதிக்கு முன்னர் ஒலிவாங்கு கருவிகளை வைத்திருந்தவரான ஆட்களின் உரிமை.

32இ. (1) கூட்டுத்தாபனம் அல்லது எவரேனும் முகவர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் விதித்துரைக்கப்படும் விபரங்களைக் கொண்டிருக்கின்றதான அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மேலும் அத்துடன் விதித்துரைக்கப்படும் கட்டணக் கொடுப்பனவின் மேலும், ஒலிவாங்கு கருவியொன்றை விண்ணப்பகாரர் உடைமையில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளித்து, அத்தகைய ஒலிவாங்கு கருவி தொடர்பில் உரிமமொன்றை வழங்குதல் வேண்டும். உரிமமொன்றை வழங்குதல்.

(2) இப்பாகத்தின் கீழான ஏதேனும் ஒலிவாங்கு கருவி தொடர்பிலான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்படும் படிவத்தில் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது எவரேனும் முகவருக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்படும் விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) இப்பாகத்தின் கீழ் வழங்கப்படும் உரிமமொவ்வொன்றும்—

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும்;

(ஆ) ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கு வலுவுடையதாயும்;

(இ) உரிமத்தில் குறித்துரைக்கப்படும் காலப்பகுதி முடிவுற்ற பின்னர் புதுப்பிக்கப்படற்பாலதாயும்,

இருத்தல் வேண்டும்.

உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும்.

32ஈ. இப்பாகத்தின்கீழ் ஏதேனும் ஒலிவாங்கு கருவி தொடர்பில் வழங்கப்படும் உரிமமொவ்வொன்றும், அவ்வுரிமத்தினது பயன்பாடு, கை மாற்றுகை என்பன தொடர்பாக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

விண்ணப்பத்திலுள்ள விபர மாற்றமெதுவும் அறிவிக்கப்படல் வேண்டும்.

32உ. உரிமமொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் இப்பாகத்தின் கீழ் வழங்கப்படும் ஓர் உரிமத்துக்கான அவரது விண்ணப்பத்திலுள்ள விபரங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படுவதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக அத்தகைய மாற்றம் பற்றிக் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது எவரேனும் முகவருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

உரிமத்தைப் புதுப்பித்தல்.

32ஊ. (1) கூட்டுத்தாபனம் அல்லது முகவர் எவரும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேலும் அத்துடன் விதித்துரைக்கப்படும் கட்டணக் கொடுப்பனவின் மேலும் 32இ என்னும் பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமமெதனையும் புதுப்பிக்கலாம்; அத்துடன் புதுப்பிக்கப்பட்டதான உரிமமானது, அதனகத்துக் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின்கீழ் உரிமமொன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொவ்வொன்றும் அதனகத்துக் குறித்துரைக்கப்படும் முடிவுறுதல் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் விதித்துரைக்கப்படும் படிவத்தில் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது எவரேனும் முகவருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

ஒலிவாங்கு கருவியை உரிமமில்லாமல் உடைமையில் வைத்திருப்பதற்கும் அல்லது பயன்படுத்துவதற்கும், உரிமமொன்றின் நியதிகளையும் நிபந்தனைகளையும் மீறுவதற்குமான தண்டம்.

32எ. (1) (அ) இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் அதற்கான உரிமமொன்றின்றி ஒலிவாங்கு கருவியொன்றை உடைமையில் வைத்திருக்கின்றவரும் அல்லது பயன்படுத்துகின்றவரும்;

(ஆ) இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறிச் செயலாற்றுகின்றவரும் அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரும்,

ஆன ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டாயிரத்தைந் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நீதிவானவர் அந்த உட்பிரிவின்கீழ் அவர் விதிக்கக்கூடிய ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து—

(அ) எந்த ஒலிவாங்குகருவி சம்பந்தமாக தவறு புரியப்படுகின்றதோ அந்த ஒலிவாங்குகருவி தொடர்பில் இப்பாகத்தின்கீழ் ஏதேனும் உரிமம் வழங்கப்பட்டிருப்பின், அந்த உரிமம் இல்லாததாக்கப்படுதல் வேண்டும் எனவும்; அத்துடன்

(ஆ) எந்த ஒலிவாங்குகருவி சம்பந்தமாக தவறு புரியப்படுகின்றதோ அல்லது அத்தவறு புரியப்படுவதில் அல்லது புரியப்படுவது சம்பந்தமாக எந்த ஒலிவாங்குகருவி பயன்படுத்தப்பட்டதோ அந்த ஒலிவாங்குகருவி அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும் எனவும்,

கட்டளையாக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் இழப்பிக்கப்பட்ட ஏதேனும் ஒலிவாங்குகருவியானது, அத்தகைய இழப்பின்மேல் முற்றுமுழுதாக அரசுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். அத்தகைய உரித்தாக்கல்—

(அ) எந்தக் காலப்பகுதிக்குள் நீதிவானின் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்படக்கூடுமோ அந்தக் காலப்பகுதி முடிவுற்றதன்பின்னர்; அல்லது

(ஆ) நீதிவானின் கட்டளைக்கெதிராக மேன்முறையீடு நீதிமன்றத்திற்கு ஒரு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளவிடத்து, இழப்புக்கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது சரியென ஏற்றுக்கொண்டு அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்படுவதன்மேல்,

பயனுடையதாதல் வேண்டும்.

32ஏ. எவரேனும் ஆள், 30அ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்காக அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்படும் முடிவுறுதல் தேதிக்குப் பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது எவரேனும் முகவருக்கு விண்ணப்பிக்கின்றவிடத்து, விதித்துரைக்கப்படும் வீதத்திலான மிகைக்கட்டணக் கொடுப்பனவு விண்ணப்பகாரரினால் செலுத்தப்படுவதற்கு அமைவாக, கூட்டுத்தாபனம் அல்லது அத்தகைய முகவர் அத்தகைய உரிமத்தைப் புதுப்பிக்கலாம்; எவ்வாறாயினும், அவ்வாறு குறித்துரைக்கப்படும் ஆகக்கூடிய வீதமானது, அத்தகைய உரிமத்தைப் புதுப்பிப்பதற்கென அவ்வாறு செலுத்தப்படற்பாலதான கட்டணத்தின் பத்து சத வீதத்தை விஞ்சுதலாகாது.

உரிமக் கட்டணம் செலுத்தப்படாதவிடத்துக்கான மிகைக் கட்டணம்.

பதிவுச் சான்றிதழின்றி ஒலிவாங்கு கருவிகளை இறக்குமதி செய்தல் விற்பனை செய்தல் முதலிய தொழில்களைக் கொண்டு நடாத்துவதன் மீதான தடை.

32ஒ. (1) இயைபான தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆளெவரும், கூட்டுத்தாபனத்தால் அதற்கென வழங்கப்படும் பதிவுச் சான்றிதழொன்றின் அதிகாரத்தின்கீழ் தவிர, ஒலிவாங்கு கருவி எதனையும், இறக்குமதி செய்தல் விற்பனை செய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழிலைக்கொண்டு நடாத்துதலாகாது;

(2) பிரிவு 44 இன் கீழ் வானொலிபரப்பு நிலையமொன்றைத் தாபித்துப் பேணுவதற்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள ஆளெவரினாலும் ஒலிவாங்கு கருவியொன்று இறக்குமதி செய்யப்படுதல், விற்பனை செய்யப்படுதல், உற்பத்தி செய்யப்படுதல் அல்லது பொருத்தியிணைக்கப்படுதல் என்பவற்றுக்கு (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

இயைபான தேதிக்கு முன்னர் தொழில் கொண்டு நடாத்தியவர்களான ஆட்கள்.

32ஓ. பிரிவு 32ஒ என்பதன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எந்த ஆள் இயைபான தேதிக்கு நேர்முன்னர் ஏதேனும் ஒலிவாங்கு கருவியை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், உற்பத்தி செய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழிலை நடாத்திக்கொண்டு இருந்தாரோ அந்த ஆள் இயைபான தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்றுமாத காலப்பகுதியொன்றுக்கு இப்பாகத்தின் கீழான பதிவுச் சான்றிதழின்றி அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குரித்துடையவராதல் வேண்டும்.

ஒலிவாங்கு கருவிகளை இறக்குமதி செய்தல் முதலியனவான தொழில்களைக் கொண்டு நடாத்தும் ஆளைப் பதிவு செய்தல்.

32ஔ. கூட்டுத்தாபனமானது—

(அ) எந்தத் தொழில் சம்பந்தமாக விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்தத் தொழில் தொடர்பாக, (149 ஆம் அத்தியாயமான) வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்படுவதான பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் சேர்த்து, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அதற்கென விண்ணப்பம் செய்யப்படுவதன் மேலும்; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்படும் கட்டணம் செலுத்தப்படுவதன் மேலும், எவரேனுமாளைக் கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துகொள்ள வேண்டும்; அத்துடன் ஒலிவாங்கு கருவிகளை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், உற்பத்தி செய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழில்களுள் எந்தத் தொழில் சம்பந்தமாக

விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ, அந்தத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கின்றதான பதிவுச் சான்றிதழொன்றை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

32க. இப்பாகத்தின்கீழ் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், எந்தத் தொழில் சம்பந்தமாக விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்தத் தொழில் தொடர்பாக, (149 ஆம் அத்தியாயமான) வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் சேர்த்து, விதித்துரைக்கப்பட்ட விபரங்கள் அடங்கியுள்ளதாக விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய படிவத்தில் கூட்டுத்தாபனத்திற்குச் செய்யப்படுதல் வேண்டும். பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

32ங. இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழொவ்வொன்றும், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்ததாக இருத்தல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் நியதிகளும் நிபந்தனைகளும்.

32ஞ. (1) எந்த ஆள்— ஒரு பதிவுச் சான்றிதழின்றியும் பதிவுச் சான்றிதழின் நியதி நிபந்தனைகளை மீறியும் ஒலிவாங்கு கருவிகளை இறக்குமதி செய்தல் விற்பனை செய்தல், முதலியனவான தொழில்களைக் கொண்டு நடாத்துவதற்கான தண்டம்.

(அ) அதற்கென வழங்கப்படும் பதிவுச் சான்றிதழொன்றின்றி ஒலிவாங்கு கருவிகளை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், உற்பத்தி செய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்றாரோ, அல்லது

(ஆ) இப்பாகத்தின்கீழ் வழங்கப்படுவதான பதிவுச் சான்றிதழொன்றின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறிச் செயலாற்றுகின்றாரோ அல்லது அதனோடு இணங்கியொழுகத் தவறுகின்றாரோ,

அந்த ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு

மாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் நீதிவானவர் அந்த உட்பிரிவின்கீழ் அவர் விதிக்கக்கூடிய ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக தவறின் பாரதூரமான தன்மையைக் கருத்திற் கொண்டு—

(அ) எந்தப் பதிவுச் சான்றிதழ் சம்பந்தமாகத் தவறு புரியப்படுகின்றதோ அந்தப் பதிவுச் சான்றிதழை, கட்டளையில் குறித்துரைக்கப் படவேண்டிய காலப்பகுதியொன்றிற்கு இடைநிறுத்துகின்றதான ; அல்லது

(ஆ) அத்தகைய பதிவுச் சான்றிதழை இல்லாதாக்குகின்றதான, அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுக்களினாற் புரியப்படும் தவறுகள் தொடர்பில் குறித்த சில ஆட்களுக்குள்ள பொறுப்பு.

32ட. இப்பாகத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்பொழுது—

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயின், தவறு புரியப்பட்ட நேரத்தில், அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரொருவராக, பொதுமுகாமையாளராக, செயலாளராக அல்லது இவர்களையொத்த வேறு அலுவலராகவிருந்த ஆளொவ்வொருவரும் ; அல்லது

(ஆ) அந்த ஆட்கள் குழு குழுமமாயின், தவறு புரியப்பட்ட நேரத்தில் அந்தக் குழுமத்தின் பங்காளரொருவராகவிருந்த ஆளொவ்வொருவரும்,

அத்தவறு தமது அறிவின்றி அல்லது உட்கையின்றிப் புரியப்பட்டது எனவும், எல்லாச் சூழ்நிலைகளிலும் தமது பணிகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு தாம் பிரயோகித்திருக்கவேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தார் எனவும் எண்பித்தாலன்றி, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 40அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"தேடுதல் எழுத்தாணைகளை நீதிவான் வழங்குதல்.

40அ. (1) நீதிவானொருவர், சத்தியத்தின் மீதான தகவலின்மீது, எவ்வாளுக்கு எதிராகத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதோ, அவ்வாள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி—

(அ) தமது நியாயாதிக்கத்திற்குள்ளான எவையேனும் வளவுகளில், ஏதேனும் ஒலிவாங்கு கருவியை உடைமையில் வைத்திருக்கின்றாரென அல்லது பயன்படுத்துகின்றாரென ; அல்லது

(ஆ) தமது நியாயாதிக்கத்திற்குள்ளான எவையேனும் வளவுகளில், ஒலிவாங்கு கருவிகளை இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்றாரென,

நம்புவதற்கு நியாயமான ஏது இருக்கின்றதெனத் திருப்திப்படுகின்றவிடத்து, அத்தகைய நீதிவான், கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு, அத்தகைய வளவுகளுக்குள் பிரவேசித்து அங்கு காணப்படும் ஆளெவரிடமிருந்தும் விசாரணைகளைச் செய்வதற்கும் எந்த ஒலிவாங்கு கருவி சம்பந்தமாக அத்தகைய மீறுகை புரியப்படுகின்றதோ அந்த ஒலிவாங்கு கருவியெதனையும் கைப்பற்றுவதற்கும் தேடுதல் எழுத்தாணையொன்றை வழங்கலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் அலுவலரொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் ஒலிவாங்கு கருவியைக் கைப்பற்றும்போது, எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் அந்த ஒலிவாங்கு கருவி கைப்பற்றப்படுகின்றதோ அந்த நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர், அத்தகைய ஒலிவாங்கு கருவியை அது கைப்பற்றப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் காண்பித்தல் வேண்டும் ; அத்துடன் அந்த ஒலிவாங்கு கருவி காண்பிக்கப்பட்டதன்மேல் நீதிமன்றமானது, அந்த ஒலிவாங்கு கருவியின் கட்டுக்காப்பு தொடர்பாக அது பொருத்தமானதெனக் கருதுகின்றவாறு அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவானது, "ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறு வகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது

முதன்மைச் சட்டவாக்கத்தில் 42அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 42அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அறவிடப்படும் போது குற்றப் பணத்தின் மூன்றிலிரண்டு பங்கு கூட்டுத்தாபன நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

42அ. இச்சட்டத்தின்கீழான தவறு எதற்காகவும் நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் எல்லாக் குற்றப்பணங்களினதும் மூன்றிலிரண்டு பங்கு, அறவிடப்படும் போது கூட்டுத்தாபனத்தின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "ஒலிபரப்பு" என்பதன் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலம் :—

இச்சட்டத்தின் IIIஅ என்னும் பாகத்தின்கீழான உரிமம் ஒன்று தொடர்பான எந்தச் சந்தர்ப்பத்திலும் "முகவர்" என்பது, இச்சட்டத்தின் 4அ என்னும் பிரிவின்கீழ் அத்தகைய முகவராக இருக்கவென கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்படும் எவரேனும் ஆள் அல்லது கூட்டிணைக்கப்பட்டதான அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழு என்று பொருள்படும் ;

"வளவுகள்" என்பது, ஏதேனும் கட்டடத்துடன் அல்லது கட்டடத்தின் பாகத்துடன் இணைந்ததாயுள்ள காணியுடன் சேர்ந்த அக்கட்டடம் அல்லது கட்டடத்தின் பாகம் என்று பொருள்படும் ;

(2) "நிகழ்ச்சித்திட்டம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களைச் சேர்ப்பதன் மூலம் :—

"ஒலிவாங்கு கருவி" என்பது, தேவையான தகவலை விரும்பப்படுகின்ற ஏதாயினுமொரு வடிவத்தில் கிடைக்கத்தக்கதாகச் செய்யும்பொருட்டு அக அல்லது புற வான்கம்பியுடன் அல்லது வானொலிச்சைகையின் வேறு மூலத்துடன் இணைக்கப்பட்ட உபாயமொன்று என்று பொருள்படும் ;

"இயைபான தேதி" என்பது, எந்தத் தேதியன்று இச்சட்டத்தின் IIIஅ என்னும் பாகம் நடைமுறைக்கு வருகின்றதோ அந்தத் தேதி என்று பொருள்படும்.

11. இயைபான தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும், உரிமங்கள் தொடர்பான (192 ஆம் அத்தியாயமான) தொலைத்தொடர்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஒலிவாங்கு கருவியொன்றை இறக்குமதி செய்தல், விற்பனைசெய்தல், உற்பத்திசெய்தல், பொருத்தியிணைத்தல் உடைமையில் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல் என்பனவற்றிற்கு அல்லது அது தொடர்பாக ஏற்புடையனவாதலாகாது.

தொலைத் தொடர்புக் கட்டளைச் சட்டத்திலுள்ள குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையன வாகாமை.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய அட்டவணை இத்தால் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய அட்டவணையைச் சேர்த்தல்.

(பிரிவு 32ஙு)

" அட்டவணை

பிரிவு 32ஙு என்பதன்கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழின் நியதிகளும் நிபந்தனைகளும்.

1. பதிவுச் சான்றிதழ் கைமாற்றப்படற்பாலதாதலாகாது.

2. பதிவுச் சான்றிதழானது எந்தத் தொழிலுடன் தொடர்பானதோ அந்தத் தொழிலிடத்தில் துலாம்பரமானவோரிடத்தில் வெளிக்காட்டி வைக்கப் படுதல் வேண்டும்.

3. பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இடாப்பொன்றை வைத் திருந்து பேணுதல் வேண்டுமென்பதுடன், அவரது தொழிலின் ஒவ் வொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பான விபரங்களை அதனகத்துப் பதிவீடு செய்தல் அல்லது பதிவீடு செய்வித்தல் வேண்டும்.

4. அவ்வாறு வைத்திருந்து பேணப்படும் அத்தகைய இடாப்பு ஒவ்வொன்றும், கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியால் அதற்கென அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் சோதனைக்குக் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

5. (1) பதிவுச் சான்றிதழொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், கூட்டுத் தாபனத்தால் அவ்வாறு செய்யுமாறு கேட்கப்படும்போது, அவரது தொழில் தொடர்பிலான அத்தகைய விபரத்திரட்டை அல்லது வேறு தகவலைக் கூட்டுத்தாபனத்திற்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) முற்போந்த பந்தியின்கீழ் கொடுத்துதவப்படும் விபரத்திரட்டு ஒவ் வொன்றும் அதனகத்துக் கூறப்பட்ட விபரங்கள் உண்மையானவை யும் செம்மையானவையும் என்ற பயன்படுவதான வெளிப்படுத்துகை யொவ்வொன்றினால் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

6. பதிவுச் சான்றிதழொன்றை வைத்திருப்பவரொவ்வொருவரும், அவரது பதி வுக்கான விண்ணப்பத்தில் கூறப்பட்ட விபரங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய மாற்றம் பற்றிக் கூட்டுத்தாபனத்திற்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

7. பதிவுச் சான்றிதழொன்றை வைத்திருப்பரொவ்வொருவரும், எந்த ஆளுடன் அல்லது எந்த ஆள் சார்பில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றதோ அந்த ஆளுக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவதான ஒரு பற்றுச்சீட்டை அதன்மீதான அவரது கையொப்பத்துடன், வழங்குதல் வேண்டும் :—

(அ) அந்த ஆளின் பெயரும், வளவுகளின் விவரணமும் முகவரியும், அத்துடன் எந்த வாகனத்தில் அத்தகைய ஒலிவாங்கு கருவி வைத்திருக்கப்படவுள்ளதோ அந்த வாகனத்தின் வகையும், பதிவு இலக்கமும் ;

(ஆ) கொடுக்கல்வாங்கலின் தன்மை ;

(இ) எந்த ஒலிவாங்கு கருவி அல்லது கருவிகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றதோ அந்த ஒலிவாங்கு கருவியின் அல்லது கருவிகளின் வகையும், இலக்கமும் ;

(ஈ) கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட தேதி.

அத்துடன் அத்தகைய பற்றுச்சீட்டு ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் கோரப்பட்டதன்மேல் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் ஆளுக்குக் காண்பித்தலும் வேண்டும். ".